<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 298/2009</u>**

2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 25.04.2025

Dw1 (சாந்தி பிரேம்குமார்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 14 வருடங்களாக சேலம் மாவட்ட சூரமங்கலத்தில் சிஎஸ்ஐ சர்ச் பாதிரியாராக உள்ளேன் என்றால் சரி. கடந்த 14 ஆண்டுகளாக என் குடும்பத்தினருடன் சேலத்தில வசித்து வருகிறேன் என்றால் 7 ஆண்டுகள் சங்ககிரியிலும் 7 ஆண்டுகள் சேலத்திலும் குடியிருந்து வருகிறேன். கவுண்டச்சிபாளையத்திலிருந்து சூரமங்கலம் 90 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல, 70-75 கி மீ இருக்கும். 1,2 பிரதிவாதிகளான எனது பெற்றோரும், எனது சகோதர சகோதரிகளும் படிப்பறிவு உள்ளவர்கள் என்றால் சரி. 1999-2000 வாக்கில் எனது பெற்றோர் கவுண்டச்சிபாளையத்தில் சிஎஸ்ஐ தெருவில் காரை வீடு கட்டினார்கள் என்றால் சரியல்ல. 1991 ல் தான் கட்டினார்கள். 1999 கால கட்டத்தில் தான் கட்டினார்கள் என்றும் 1991 ல் கட்டியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 3 கிரய பத்திரப்படி 2003 ம் ஆண்டு முதல் வாதி தாவா சொத்தை கிரயம் பெற்றதிலிருந்து வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல, இன்றுவரை எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைமனு எண் 212/2009 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார்

என்றால் தெரிந்து கொண்டேன். 06.08.2010 ல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது நாங்கள் அங்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, நான் என் பெற்றோர் ஆகிய அனைவரும் உடனிருந்தோம். 14.09.2010 அன்று நீதிமன்ற ஆணையர் தனதுஅறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் ஆமாம். இன்று வரை மேற்படி ஆ ணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். எந்த தேதியில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிகிறேன் என்றும் இன்றுவரை ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இடை மனு எண் 339/2014 ஐ இடைக்கால உறுத்துககட்டளை கோரி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த மனுவிற்கு எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த மனுவை பற்றி எனக்கு தெரியாது. அந்த மனுவில் எனது தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகாததால் exparte order 29.05.2014 அன்று வழங்கப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வாசாஆ 3 கிரய பத்திரத்திற்கு பின்னிட்டு நானோ எனது பெற்றோரோ 1 முதல் 6 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்ததை காண்பிக்க எந்த ஒரு வருவாய் ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், ஆனால் சொத்து எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது. இந்த வழக்கை நடத்த ஆர்வம் இல்லாமல் வாதியிடம் கூடுதல் பணம் கேட்டு மிரட்டி வந்தோம் என்றால் சரியல்ல, அது பொய்யான விவரம் ஆகும். இவ்வழக்கில் எங்கள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்யாததால் எங்களுக்கு எதிராத 3 முறை exparte உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 3 வது முறை exparte உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின் அதை ரத்து

செய்ய எங்கள் தரப்பில் தாக்கல் செய்யபட்ட மனுவில் இந்நீதிமற்த்தில் ரூ.50000/- cost விதிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றும், அந்த உத்தரவு பேரில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த cost 50,000/-த்திலிருந்து ரூ.30000/- ஆக குறைக்கப்பட்டது என்றால் ஆமாம்.

(வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd.K.Krishnapriya,25.4.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS